## வாக்காளர் பட்டியலில்

# பெயர் சேர்க்க சிறப்பு முகாம்!

## இன்று தொடங்கி 4 நாட்கள் நடக்கிறது!

சென்னை, நவ.16-

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க சிறப்பு முகாம் இன்று (சனிக்கிழமை) தொடங்கி 4 நாட்கள் நடக்கிறது.

வாக்காளர் பட்டியலில் திருத்தம் இதுதொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

இந்திய தேர்தல் ஆணையத் தின் உத்தரவின்படி, 1.1.2025ம் தேதியை தகுதி ஏற்படுத்தும் நாளாக கொண்டு வாக்காளர் பட்டியலில் திருத்தம் மேற்கொள்ளும் வகையில் சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்ற தொகுதிகளுக்கான வரைவு வாக்காளர் பட்டியல் 29.10.2024 அன்று வெளியிடப்பட்டது.

இந்த வரைவு வாக்காளர் பட்டியல் சென்னை மாநகராட்சி மண்டல அலுவலகங் கள் 4, 5, 6, 8, 9, 10, 13 மற்றும் அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் பொதுமக்க ளின் பார்வைக்கு வைக்கப்பட் டுள்ளது. பொதுமக்கள் தங்களது பெயர் மற்றும் குடும்பத்தி னர் பெயர் விவரங்கள் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளனவா? என்பதை சரிபார்த்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். சிறப்பு முகாம் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல், முகவரி மாற்றம் செய்தல் போன்ற வற்றை வாக்காளர்கள் மேற் கொள்வதற்கு வசதியாக

இன்று (சனிக்கிழமை) மற்றும் 17ந்தேதி நாளை (ஞாயிற்றுக்கிழமை)

மற்றும் 23, 24 ஆகிய தேதிகளில் சென்னை மாவட்டத்திற்கு உட்பட்ட 947 வாக்குச்சாவடி மையங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளன.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாமல் உள்ளவர்கள் மற்றும் 1.1.2025 அன்று 18 வயது பூர்த்தி அடை பவர்கள் (1.1.2007ந் தேதிக்கு முன்பாக பிறந்தவர்கள் மற்றும் 17 வயது நிரம்பி 18 வயது பூர்த்தி அடையும் நிலையில் உள்ளவர்களும்) படிவம்6 மூலம் வாக் காளர் பட்டியலில் பெயர் சேர்த்துக்கொள்ளலாம். பெயர் நீக்கம் மற்றும் சட்ட மன்ற தொகுதிக்குள்ளேயே ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு குடிபெயர்ந்து புதிய வசிப்பிடத்தில் உள்ளவர்கள், மேலும் வேறு தொகுதிக்கு குடிபெயர்ந்தவர் கள் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க மற்றும் திருத் தங்கள் செய்ய உரிய படி வத்தை பூர்த்தி செய்து அதற் கான ஆதாரத்தை இணைத்து அளிக்க வேண்டும். இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம்

சிறப்பு முகாம் மட்டுமல்லாமல் பெருநகர சென்னை மாந கராட்சி மண்டல அலுவல ரின் அலுவலகத்தில் 28 ந்தேதி வரை காலத்திற்குள் விண்ணப் பிக்கலாம். மேலும், http://voters. eci.gov.in/ என்ற இணையதளம் மூலமாகவும் பெயர்கள் சேர்க்கவும், நீக்கவும், திருத் தங் களை மேற்கொள்ளவும் விண்ணப்பிக்கலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

## சென்னை கிழக்கு மாவட்ட கழகத்தினர்

# வாக்காளர் சரிபார்க்கும் பணியில் தீவிரமாக ஈடுபடுவீர்!

## அமைச்சர் – மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



01.01.2025 தேதியை தகுதி நாளாகக் கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் திருத்தல் பணிகளை இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்ததை தொடர்ந்து தமிழ்நாட்டில் நவம்பர் 16, 17 மற்றும் நவம்பர் 23, 24 தேதிகளில் வாக்காளர் பட்டியலில் பெயர்சேர்த்தல் / நீக்கல் சிறப்பு முகாம் நடைபெறுகிறது. இச்சிறப்புமுகாமில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட கொளத்தூர், துறைமுகம், எழும்பூர், திரு.வி.க நகர், வில்லிவாக்கம், அம்பத்தூர் ஆகிய தொகுதிகளில் உள்ள 1,379 பாகங்களில் சிறப்பு முகாம் அமைத்து அந்தந்த பாகத்திற்குட்பட்ட மாவட்ட/பகுதி/வட்ட நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் செயல் வீரர்கள் BLA2- BLC க்களுடன் இணைந்து அவரவர் பகுதியில் உள்ள வாக்குச்சாவடிகளில் 01/01/2025 அன்று 18 வயது நிறைவடைபவர்களை புதிய வாக்காளர்களாக பதிவு செய்தல் அந்தந்த பூத்களில் தகுதியற்ற வாக்காளர்களை நீக்குதல், தகுதியான வாக்காளர்களை சேர்த்தல் போன்ற வாக்காளர் திருத்தப்பட்டியல் பணிகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**

செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

---

## தருமபுரி மேற்கு மாவட்டம்

# பாலக்கோடு சட்டமன்ற தொகுதி வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு முகாம்!

## தொகுதி பார்வையாளர் - மாநில கழக விவசாய அணி துணைச் செயலாளர் டி.எம்.அரியப்பன் வேண்டுகோள்!

தருமபுரி, நவ.16

தருமபுரி மேற்கு மாவட்டம், 57 பாலக்கோடு சட்டமன்ற தொகுதி வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு முகாம் நடைபெறுவது குறித்து தொகுதி பார்வையாளர், மாநில விவசாய அணி துணை செயலாளர் டி.எம். அரியப்பன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க தமிழக துணை முதல்வர் உதயநிதி ஈஸ்டாலின் அவர்கள், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் - தருமபுரி பொறுப்பு அமைச்சர், மாவட்ட கழக செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மாவட்ட கழக செயலாளர் முனைவர். பி.பழனியப்பன், தருமபுரி பாராளுமன்ற உறுப்பினர், வழக்கறிஞர் ஆ.மணி ஆகியோர் ஆலோசனைக்கிணங்க ஒன்றிய கழகச் செயலாளர்கள் காரிமங்கலம், மத்திய ஒன்றியம் இல. கிருஷ்ணன், காரிமங்கலம் மேற்கு எம். வி.டி. கோபால், காரிமங்கலம் கிழக்கு அடிலம் அன்பழகன், பாலக்கோடு மேற்கு ஒன்றியம் பி.கே. அன்பழகன், பாலக்கோடு மத்திய ஒன்றியம் முனியப்பன், பாலக்கோடு பேரூர் கழக செயலாளர் பி.கே.முரளி, காரிமங்கலம் பேரூர் கே.வி. சீனிவாசன், மாரண்ட அள்ளி பேரூர் எம். வெங்கடேசன் ஆகியோர் தலைமையில் நடைபெற உள்ள வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் முகாம் ஆய்வு நிகழ்ச்சியில் தேர்தல் பொறுப்பாளராகிய நான் தங்களுடன் கலந்து ஆலோசித்திட ஆய்வு சுற்றுப் பயணவிபரப்பட்டியலையும் இறுதி செய்து தங்களுக்கு அனுப்பியுள்ளேன்.

மேற்கண்ட வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு முகாம் ஆய்வு நிகழ்ச்சியில் பின்வருமாறு உள்ள படி அமைத்துத் தந்து உதவி செய்யும்படி உங்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேற்கண்ட ஆய்வு கூட்டத்திற்கு கட்டாயமாக முகவர்கள் (BLA 2) பொறுப்பாளர்கள் தங்களின் வாக்குச்சாவடியில் உள்ள வாக்காளர்களின் சேர்த்தல், நீக்குதல் தொடர்பான அனைத்து விவரங்களையும் சரியாக தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

அனைத்து பாக முகவர்களும் தங்களுக்குரிய வாக்குச்சாவடியில் தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்டுள்ள வாக்காளர்களின் வரைவு பட்டியலையும் வைத்திருக்க வேண்டும்.

நிகழ்ச்சியில் ஒன்றிய / பேரூர் கழகத்தின் அனைத்த நிர்வாகிகளும் கட்டாயம் கலந்து கொள்ள அறிவுறுத்த வேண்டுகிறேன். தவறும் பட்சத்தில் அதற்குரிய காரணத்தை எனக்கு தனி தபாலில் தெரிவிக்க வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

தேதி, ஒன்றியம் / பேரூர் மற்றும் நேரம் விவரம் வருமாறு:-

16.11.2024 - காரிமங்கலம் கிழக்கு ஒன்றியம், காரிமங்கலம் மேற்கு, காரிமங்கலம் மத்தியம், காரிமங்கலம் பேரூர் - காலை முதல் மாலை வரை.

17.11.2024 - பாலக்கோடு மத்திய ஒன்றியம், பாலக்கோடு மேற்கு ஒன்றியம், பாலக்கோடு பேரூர், மாரண்ட அள்ளி பேரூர் - காலை முதல் மாலை வரை.

மேற்கண்ட குறிப்புகளை செயல்படுத்தி, வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு முகாம் ஆய்வு நிகழ்ச்சியினை சிறப்பாக நடத்த அனைத்து ஒன்றிய / பேரூர் நிர்வாகிகளும் ஆதரவு தரும்படி வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு டி.எம். அரியப்பன் கேட்டுக்கொண்டுள்ளார்.

---

## பேரூரில் ரூ.4276.44 கோடி மதிப்பீட்டில்

# கடல்நீரை குடிநீராக்கும் நிலையம்!

## சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

சென்னை, நவ.16

சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் 4 ஆயிரத்து 276 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பேரூரில் அமைக்கப்பட்டு வரும் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தின் கட்டுமான பணிகளை சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய் நேற்று (15.11.2024) பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான குடிநீர், பூண்டி, சோழவரம், புழலேரி, கண்ணன்கோட்டை தேர்வாய் கண்டிகை, செம்பரம்பாக்கம், வீராணம் ஆகிய ஏரிகள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. சென்னை மாநகரின் நீண்டகால குடிநீர்த் தேவை மற்றும் மக்களின் அன்றாட குடிநீர் தேவையைக் கருத்தில் கொண்டு, சென்னை குடிநீர் வாரியம் பல்வேறு நடிவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

சென்னையின் வளர்ச்சிக்கேற்ப குடிநீர் ஆதாரங்களை மேம்படுத்து வதற்காக முதலமைச்சர் அவர்கள் 21.08.2023 அன்று சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) நிதியுதவியுடன் செங்கல்பட்டு மாவட்டம், கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள பேரூரில் 4 ஆயிரத்து 276 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

அதன் அடிப்படையில் இந்நிலையத்தின் கட்டுமான பணிகள் தற்போது முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. கடல்நீரை உட்கொள்ளும் கட்டமைப்பு (Intake Structure), செதிலடுக்கு தொட்டி (Lamella Clarifier), சவ்வூடு வெளியேற்றும் தெளிந்த நீர் தொட்டி (RO Permeate Tank), நடுநிலைபடுத்தும் தொட்டி (Neutralization Pit), நீர் சேகரிப்பு தொட்டி (Product water tank), சுத்திகரிக்கப்பட்ட நீர் சேகரிப்பு தொட்டி (Clear water reservoir), கசடுகளை கெட்டிப் படுத்தும் தொட்டி (Sludge Thickener), நிர்வாகக் கட்டிடம் (Admin Building), பண்டக சாலை (Warehouse) மற்றும் தொழிற்கூடங்களுக்கான (Workshop) கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றது. மேலும், கடல்நீரை உட்கொணரும் குழாய்கள் பதிக்கும் பணிக்கான முன்னேற்பாடு பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையத்தில், கடல் நீரை குடிநீராக்க 1150 மீட்டர் நீளத்திற்கு கடலுக்குள் HDPE குழாய்கள் பதிக்கப்படும். மேலும், இந்நிலையத்தில் அமைக்கப்படும் நீர் கரைந்த காற்று அலகுகள் (Dissolved Air Floatation) மற்றும் இரட்டை ஈர்ப்பு மணல் வடிகட்டி அலகுகள் (Gravity Dual Media Filter) உடன் மற்ற வழக்கமான நிலையங்களை விட நவீன முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த அலகுகள் மூலம் கடலில் உள்ள கசடுகள் (மிதப்பவை, துகள்கள்) தற்போதுள்ள நிலையிலும், அதன் பிறகு கடல்நீரை குடிநீராக்கும் திறனை நிலையாகப் பெறும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், இதற்காக, இந்நிலையத்திலிருந்து போரூர் வரை 59 கி.மீ நீளத்திற்கு குடிநீர் குழாய் பதிக்கப்படும்.

இந்த திட்டத்தின் மூலம், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகள், தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அருகாமையில் உள்ள 20 ஊராட்சிப் பகுதிகளில் உள்ள 22.67 இலட்சம் மக்கள் பயன் அடைவார்கள்.

இவ்வாய்வின் போது, தலைமை பொறியாளர் திருமதி.ஜ.சுகந்தி, மேற்பார்வை பொறியாளர், திருமதி. இ. சாந்தி செயற்பொறியாளர் ஸ்.கிருபாகரவேல் ஆகியோர் உடன் இருந்தனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றியம் மற்றும் பேரூராட்சியில் உள்ள பல்வேறு பகுதிகளில் சுமார் 7.67 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட பல்வேறு வளர்ச்சி திட்ட கட்டிடங்களை காஞ்சி தெற்கு மாவட்ட செயலாளர் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம் ஆகியோர் திறந்து வைத்து பயன்பாட்டிற்கு அர்பணித்துப் பொதுமக்களுக்கு இனிப்புகளையும் வழங்கினர். இதில் ஒன்றிய செயலாளர் ஞானசேகரன், பேரூர் செயலாளர் பாரி வள்ளல்,தலைமை செயற்குழு உறுப்பினர் நாகன்,பேரூராட்சி மன்றத் தலைவர் சசிகுமார், பேரூராட்சி மன்றத் துணைத் தலைவர் இளமதி கோவிந்தராஜ், ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், ஒன்றிய மற்றும் பேரூர் திமுக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

---

## திருவொற்றியூர் கிழக்குப் பகுதியில்

# வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி!

## பகுதிச் செயலாளர் தி.மு.தனியரசு வேண்டுகோள்!

சென்னை, நவ.16

சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றியூர் கிழக்குப் பகுதியில் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் முகாம்கள் நடைபெறுகிறது.

இது குறித்து பகுதிச் செயலாளர் தி.மு.தனியரசு விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ் சுதர்சனம் எம்.எல்.ஏ. அவர்களின் அறிவுறுத்தலின்படி திருவெற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர், திருவொற்றியூர் தொகுதி பார்வையாளர் ஆரம்பாக்கம் கே.ஆறுமுகம் ஆகியோரின் ஆலோசனைப்படி

திருவெற்றியூர் சட்டமன்ற தொகுதி கிழக்கு பகுதி வார்டு 7 முதல் 14வது அ வார்டு வரை அடங்கிய முகாம்களில் இன்று (16.11.2024, சனிக்கிழமை) மற்றும் நாளை (17.11.2024, ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நாட்களில் புதிய வாக்காளர்களை சேர்த்திடவும் திருத்தம் செய்ய இந்த சிறப்பு முகாமில் கழக பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள் வட்ட செயலாளர்கள் மாவட்ட பிரதிநிதிகள் வட்ட கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் BLA2 க்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள், அனைவரும் கழக முன்னோடிகள் வாக்காளர் முகாமில் களப்பணியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்

இவ்வாறு திருவொற்றியூர் கிழக்குப் பகுதி செயலாளர் தி.மு.தனியரசு தெரிவித்துள்ளார்.

---

## அ.ம.துரைவீரமணி,ச. சங்கர் கணேஷ் எம்.சி முன்னிலை !இரா. வினோத் தலைமையில்

# வானகரம் ஊராட்சியில் இல்லம் தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை!

## எ.எம்.வி.பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ பங்கேற்பு !

சென்னை நவ:16

கழக இளைஞரணி செயலாளர்,தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பிற்கிணங்க, சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியம் அறிவுறுத்தலின்படி இன்று (16.11.2024) சனிக்கிழமை காலை 8.00 மணியளவில் சென்னை தெற்கு மாவட்டம், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியம், வானகரம் ஊராட்சியில் இல்லந்தோறும் இளைஞரணி உறிப்பினர் சேர்க்கை பணி ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் இரா. வினோத் தலைமையில் நடைபெறுகிறது.

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா,வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய செயலாளர், அய்யப்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் அய்யப்பாக்கம் அ.ம.துரைவீரமணி மற்றும் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர், 151வது வார்டு மாமன்ற உறுப்பினர் ச.சங்கர் கணேஷ் எம்.சி., ஆகியோர் முன்னிலையில் இல்லந்தோறும் இளைஞரணி உறுப்பினர் சேர்க்கை நடைபெறவுள்ளது.

அதுபோது ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் க. செந்தில் குமார்,எஸ்.பி. முரளிகிருஷ்ணன்,பி. மணீஷ், எம். சபரி ராஜா, எஸ்.ஜனார்தனன் உள்ளிட்ட கிளை இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஊராட்சி கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் மற்றும் இளைஞரணி தோழர்கள் கலந்து கொள்கின்றனர்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஆர்கே பேட்டை வட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகள் 56 பேர் இலவச தொகுப்பு வீடுகள் கேட்டு மனு அளித்தனர். அதன் அடிப்படையில் ஆர்கே பேட்டை அடுத்த எஸ்.வி.ஜி. புரம் கிராமத்தில் 34 மாற்றுத்திறனாளிகளுக்கு கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் ரூபாய் தலா 3,54,000 மதிப்பெட்டியில் வீடுகளை கட்டிக் கொள்ள உத்தரவு நகலை திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ வழங்கி வீடு கட்டுவதற்கு அடிக்கல் நாட்டின் தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் பழனி, சி என் சண்முகம்,ஊராட்சி மன்ற தலைவர்கள். சத்யராஜ், ஆனந்தி செங்கோட்டவன், ராமசாமி, நிர்வாகிகள் பா சம்பத், திருவேங்கடம், நாகப்பன், வெங்கடேசன், சின்ன பாப்பா, நவீன் குமார், பிச்சைண்டி, சுகுணா மூர்த்தி, டில்லி பாபு, குருநாதன்,சித்திக் அலி, சீனிவாசன், ராஜசேகர், மற்றும் அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டாக்டர் துரை. கிருஷ்ணமூர்த்தி
### நவம்பர் 16 (1999)



**மருத்துவரான இவர், திராவிடக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.**

**1989ஆம் ஆண்டு சிதம்பரம் சட்டமன்றத் தொகுதியில், கழக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்று, தொகுதி வாழ் மக்களுக்காக பணிபுரிந்து அனைவரின் பாராட்டைப் பெற்றவர்.**

**தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும், தணிக்கைக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**